# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

## வனம்

## மானியக் கோரிக்கை எண்.54

அறிவிப்புகள்

**2021 – 2022**

**கா. ராமச்சந்திரன்**

**வனத்துறை அமைச்சர்**

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை 2021 –2022 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

# வனம்

**1. வன விலங்குகளுக்கான அவசர சிகிச்சை மற்றும் மறுவாழ்வு தேவைகளுக்கென, மூன்று உயர் வனவிலங்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள் கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும்.**

வனங்களை விட்டு வெளியே வரும் காயமடைந்த வன விலங்குகளுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அளிக்கவும், அவற்றினை மீட்டு, மறுவாழ்வு அளிக்கவும் வன விலங்குகளுக்கான அவசர சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள் கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும்.

இம்மையங்கள் மூலமாக கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவையும் நடத்தப்படும். இடம்பெயர்ந்து இன்னலுக்கு உள்ளாகும் வன உயிரினங்களை மீட்டு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிக்கும் பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் உரிய நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்றவும் இந்நிகழ்ச்சிகள் உதவிபுரியும்.

## 2. தற்போதுள்ள வனத்துறையின் தேவைகள் மற்றும் சிறந்த மேலாண்மைக்கென தமிழ்நாடு வனத்துறை நடவடிக்கைகள் மின்னணுமயமாக்கப்படும்.

வன மற்றும் வன உயிரின வாழ்விடங்களை திறம்பட மேலாண்மை செய்ய வலுவான புவிசார் தகவல்தரவினை உருவாக்கும் நோக்கில் தமிழ்நாடு வனத்துறையின் நடவடிக்கைகளை மின்னணுமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் திட்ட உருவாக்கம், கண்காணிப்பு மற்றும் கூர்ந்தாய்வு போன்றவற்றிற்குத் தேவையான துல்லியமான, நம்பகமான மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய தகவல் தரவு கிடைக்க வழிவகை செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட முக்கிய பணிகள் மேற்கொள்ளப்படும் :

- வனத்துறைக்கான ஒருங்கிணைந்த புவிசார் தகவல்தரவு ஏற்படுத்தப்படும்.
- வனங்களை நிலையாக மேலாண்மை செய்ய இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை வன வளங்களை அளவீடு செய்தல், சரிபார்ப்பு அமைப்பினை உருவாக்குதல்.
- வனத்துறை நடவடிக்கைகளை முழுவதுமாக மின்னணுமயமாக்குதல்.

வன உயிரின வழித்தடங்கள், சூழல் தாக்க மண்டலங்கள், ஈரநிலங்கள், வனப்பகுதிகள் மற்றும் வன உயிரின வாழ்விடங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் மண்டலங்கள் போன்றவற்றினை வரையறுக்கவும் இது உதவிபுரியும்.

**3. வன உயிரினங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கான நிவாரணத் தொகை உயர்த்தி வழங்கப்படும்.**

மனித வன உயிரின மோதலைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இருப்பினும் மனித உயிரிழப்புகள், காயம் அடைதல் போன்ற சேதங்களைத் தவிர்க்க இயலாமல் போகிறது. எனவே, வனவிலங்கு தாக்கி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கும், நிரந்தர இயலாமை ஏற்படும் நேர்வுகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகையான ரூ.4.00 இலட்சம், ரூ.5.00 இலட்சமாக அதிகரித்து வழங்கப்படும். இந்த ஆண்டு வன விலங்குகளால் ஏற்பட்ட உயிரிழப்பு, காயம் மற்றும் பயிர்ச்சேதம் போன்றவற்றிற்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் இந்த ஆண்டு நிவாரணத் தொகைக்கென ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. தமிழ்நாட்டில் தென்மாவட்ட யானைகள் வாழ்விடங்களை பாதுகாக்கும் பொருட்டு அகத்தியர்மலை யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் தற்போது நீலகிரி, கோயம்புத்தூர், ஆனைமலை மற்றும் திருவில்லிப்புத்தூரில் யானைகள் பாதுகாப்பிற்கென்று யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட்டு, யானைகள் திட்டம் மூலம் வாழ்விட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதைப் போல், ஆசிய யானைகள் அவற்றின் வாழ்விடங்களை மேலும் சிறப்பாக மேலாண்மை செய்யும் பொருட்டு கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்திலுள்ள யானைகளின் வன வாழ்விடங்களை உள்ளடக்கி தமிழ்நாட்டின் ஐந்தாவது யானைகள் காப்பகமாக அகத்தியர்மலை யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் ஒருங்கிணைந்த யானைகள் வாழ்விட மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**5. தமிழ்நாட்டில் அழிந்து வரும் நிலையிலுள்ள மிக அரிதான கடற்பசு (Sea Cow) இனத்தையும் அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு, "கடற்பசு பாதுகாப்பகம்" மன்னார் வளைகுடா, பாக் விரிகுடா பகுதியில் ஏற்படுத்தப்படும்.**

மன்னார் வளைகுடா மற்றும் பாக் கடற்பகுதியில் காணப்படும் கடற்பசு என்பது மிக அரிய வகை கடல்வாழ் பாலூட்டியாகும். கடல்மாசு மற்றும் கடற்புல் படுகைகள் அழிக்கப்படுவதால் இந்த இனம் அழிவைச் சந்தித்து வருகிறது. இதைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்தியாவில் முதன் முறையாக "கடற்பசு பாதுகாப்பகம்" இப்பகுதியில் சமூக பங்களிப்புடன் ஏற்படுத்தப்படும். தமிழ்நாட்டின் வளமையான கடல்வாழ் உயிர்ப்பன்மை பாதுகாப்பிற்கு இக்காப்பகம் உதவிபுரியும்.

**6. வனத்துறையின் வனப்பாதுகாப்பு மற்றும் வனக் குற்றங்களை எளிதில் கண்டறிய மோப்பநாய் பிரிவுகள் ஒவ்வொரு வனமண்டலத்திற்கும் ஏற்படுத்தப்படும்.**

வனப்பகுதியில் நடைபெறும் வனவிலங்கு வேட்டை, திருட்டு மரவெட்டு உள்ளிட்ட சட்ட விரோதமான செயல்களை உடனுக்குடன் கண்டறியவும், குற்ற புலனாய்விற்கு உதவியாகவும் சிறப்பு மோப்ப நாய் பிரிவு ஒன்று ஒவ்வொரு மண்டலத்திலும் ஏற்படுத்தப்படும். இதில் நமது காலநிலைக்கு பழக்கப்பட்ட உள்ளூர் வகை நாய்கள் பயன்படுத்தப்படும். இதற்குரிய பயிற்சி, உரிய தேசிய பயிற்சி நிறுவனம் மூலம் அளிக்கப்படும். வனப்பாதுகாப்பை வலுப்படுத்த இந்த மோப்ப நாய் பிரிவு (Sniffer Dog Squad) உதவிபுரியும்.

**7 . மாநிலத்தில் கடல்வாழ் விலங்கு வேட்டை தடுத்தல் மற்றும் கடத்தல் உள்ளிட்ட கடல்வாழ் வன உயிரினக் குற்றங்களுக்கென சிறப்பு கடல்சார் உயர் இலக்குப் படை (Marine Elite Force) ஒன்று உருவாக்கப்படும்.**

கடல்வாழ் விலங்குகள் கொல்லப்படுதல் மற்றும் கடத்தல் தற்போது நன்கு திட்டமிடப்பட்டதாகவும், பல மாநிலங்களுக்கிடையே உள்ள சட்ட விரோத குழுக்கள் உதவியுடனும் நடைபெறுகிறது. இதை சரியாக கண்டறியவும், புலனாய்வு செய்யவும், சிறப்பு பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு கடல்சார் உயர் இலக்குப்படை (Marine Elite Force) ஒன்று ஏற்படுத்தப்படும்.

**8 . தமிழ்நாட்டின் வனப்பகுதிகளில் காணப்படும் அந்நிய களைத் தாவரங்களை அகற்றுவது மற்றும் அவ்வாறு அகற்றப்பட்ட வனப்பகுதிகளை நல்ல வளமைக்கு கொண்டு வருவது தொடர்பாக இந்த அரசு தனிக் கொள்கை ஒன்றை வகுக்கும்.**

மாநிலத்தின் பெரும்பாலான வனப்பகுதிகளில் உண்ணிச் செடி எனப்படும் லாண்டனா, சீமைக் கருவேல் உள்ளிட்ட அந்நிய களைத் தாவரங்கள் பெருமளவில் வளர்ந்து இயற்கையான வனச் சூழலையும், வன வாழ்விடங்களின் வளமையையும் பாதிக்கின்றன. வன மேலாண்மையில் இது மிகப்பெரும் சவாலாக உள்ளது. இவ்வாறான அந்நிய களைத் தாவரங்களை அகற்றுவது தொடர்பாக வல்லுநர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தி, இதுதொடர்பாக அரசின் தனிக் கொள்கை ஒன்று வெளியிடப்படும்.

**9. வன ஆவணக் களஞ்சியம் மற்றும் வனத் தரவு மையம் ஒன்று ஏற்படுத்தப்படும்.**

வனத்துறை வெளியிட்டுள்ள ஆராய்ச்சி கட்டுரைகள், ஆய்வுக் குறிப்பேடுகள், வன மேலாண்மை தொடர்பாக இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஆவணங்கள், ஆணைகள், கட்டுரைகள் அனைத்தையும் பாதுகாக்கவும், அடுத்த தலைமுறையினருக்கு எளிதில் கொண்டு செல்லவும், பொது மக்கள் வனத்துறை தொடர்பான தகவல்களை எளிதில் அறிந்து கொள்ளும் வகையிலும் "மாநில வன ஆவணக் களஞ்சியம் மற்றும் வனத் தரவு மையம்" ஒன்று ஏற்படுத்தப்படும்.

**10. மாநில அளவில் திட்டமிடப்பட்ட வன உயிரினக் குற்றங்களை கண்டறிந்து தடுக்க வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.**

நான்கு மண்டல அலகுகளுடன் கூடிய வன மற்றும் வன உயிரினக் கட்டுப்பாட்டு பிரிவு பின்வரும் குறிக்கோள்களுடன் ஏற்படுத்தப்படும்.

- வனம் மற்றும் வன உயிரினக் குற்றக் கட்டமைப்புகளின் சமீபத்திய போக்குகள் மற்றும் தொடர்புடைய மாதிரிகளை அறிந்துகொள்ளுதல்.

- பெருகி வரும் திட்டமிடப்பட்ட குற்றங்கள் என அங்கீகரிக்கப்பட்ட வன உயிரினக் கடத்தலை கட்டுப்படுத்துதல்.

- வனம் மற்றும் வன உயிரின சட்டத்தினை திறம்பட நடைமுறைப்படுத்த தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் குற்ற நுண்ணறிவு வாயிலாக வனத்துறைக்கு அதிகாரம் அளித்தல் .

- வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள், வனக் குற்றவாளிகள் மற்றும் திட்டமிடப்பட்ட வன உயிரினக் கடத்தல்கள் போன்றவை குறித்த மாநில அளவிலான தகவல் தரவுகளை உருவாக்கி பராமரித்தல்.

- சுங்கத்துறை, வருவாய் புலனாய்வுத்துறை, மாநில காவல் துறை போன்ற புலனாய்வு அமைப்புகள் மற்றும் பிற மாநில வனத்துறைகளுடன் தொடர்பு கொண்டு தகவல் தொழில்நுட்ப நடைமுறைகள் மற்றும் வனம் மற்றும் வன உயிரினக் குற்றத்தகவல்களை பகிரிந்து கொள்ளுதல்.

தற்போதைய காலச் சூழலுக்கேற்ப மாறிவரும் குற்றங்கள், குற்ற நடைமுறைகளுக்கேற்ப, சிறப்பாக செயலாற்ற இந்த பிரிவு உதவி புரியும்.

**11. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரிந்து வரும் ஊழியர்களின் நீண்ட கால கோரிக்கையாக இருந்து வரும் நிலுவையிலுள்ள திருத்திய ஊதியம் இந்தாண்டு முதல் வழங்கப்படும்.**

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் தற்போது பணிபுரிந்து வரும் 212 பணியாளர்களுக்கு நீண்ட நாள் கோரிக்கையாக உள்ள திருத்தப்பட்ட ஊதியம் இந்த ஆண்டு முதல் அமல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கென இந்த நிதியாண்டில் ரூ.6.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**12. அரசுக்கு சொந்தமான வன நிறுவனங்களில் அவற்றின் செயல்திறனை மேம்படுத்த விரிவான வணிக ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், அரசு ரப்பர் கழகம் மற்றும் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் ஆகிய அரசுக்கு சொந்தமான வன நிறுவனங்களில் நவீனமயமாக்கும் பணிகள், தொழிற்முறைப் பயிற்சி அளித்தல், திறன் மேம்பாடு, வணிகத் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் தொடர்ந்து இலாபம் ஈட்டுவதற்குமான வழிவகைகள் குறித்து மதிப்புமிக்க முகமைகள், மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் உதவியுடன் விரிவான வணிக ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**கா. ராமச்சந்திரன்**

**வனத்துறை அமைச்சர்**